சாதி ஒழிப்பே !







# ஆதித்தமிழர் பேரவை
# AATHITHAMIZHAR PERAVAI

தமிழ்நாடு

நாள் : 07-02

சேரல்,

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்,

தமிழ்நாடு அரசு, புனித ஜார்ஜ் கோட்டை,

தலைமை செயலகம்,

சென்னை - 600 009.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு,

ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களான அருந்ததியர்களின் விடுதலையை முன்னிறுத்தி செயல்பட்டு கொண்டிருக்கிற ஆதித்தமிழர் பேரவையின் சார்பில் வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பள்ளிக்கூட மாணவர்களுக்கு விலையில்லா புத்தகப்பை, சீருடை, ஜாமெட்ரி பாக்ஸ் மற்றும் காலணி தருவதாக அறிவிக்கப் பட்டுள்ள தங்களது தலைமையிலான தமிழக அரசின் முடிவை ஒடுக்கப்பட்ட மக்கள் சார்பாக மனமார வரவேற்கிறோம். பாராட்டுகிறோம்.

ஏராளமான பள்ளி மாணவர்கள் மற்றும் ஏழைக் குடும்பங்களின் வயிற்றில் பால் வார்த்திருக்கிற இந்த அறிவிப்புக்கு எமது ஆதித்தமிழர் பேரவை கோடானுகோடி நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறது.


சக்தி ரமா அடுக்ககம், 3-வது தளம், 'இ' 2/2ஏ, கிழக்கு லோகமான்ய வீதி,
இரத்தினசபாபதிபுரம், கோவை-641002. பேசி: 94430 - 84642, 94427 01235
மின் அஞ்சல் : adhiyamaanperavai@gmail.com
இணையதளம் : www.aathithamizharperavai.com







# ஆதித்தமிழர் பேரவை
# AATHITHAMIZHAR PERAVAI

தமிழ்நாடு

நாள் : 7-2-2012

/2/

அதே சமயம் ஒடுக்கப்பட்ட மக்களின் பால் மாறாத அன்பு வைத்திருக்கிற தாங்கள் இந்த அறிவிப்புகளை செயல்படுத்து கிற வேளையில் விலையில்லா காலணிகளை காலம் நெடுக வஞ்சிக்கப்பட்டு வந்திருக்கிற அருந்ததியர் மக்களிடமே கொள்முதல் செய்கிற வகையில் நெல் விவசாயிகளிடம் நெல் கொள்முதல் நிலையங்கள் அமைத்து கொள்முதல் செய்வது போலவும், கைத்தறி துணிகளை கோ-ஆப்டெக்ஸ் மூலமாகவும் கைத்தறி விற்பனை சங்கங்கள் மூலமாக கொள்முதல் செய்வது போலவும்,

மாவட்டத்திற்கு ஒரு காலணி கொள்முதல் நிலையம் அமைத்து அருந்ததியர்களிடம் மட்டுமே காலணிகளை கொள்முதல் செய்ய அறிவிப்பு வெளியிட்டு தங்கள் மீது மாறாத பாசம் வைத்திருக்கிற அருந்ததியர் மக்களுக்கு உதவி செய்யு மாறு ஆதித்தமிழர் பேரவை கேட்டுக் கொள்கிறது.

ஒடுக்கப்பட்ட மக்கள் பணியில்,

( நிறுவனர்)

சக்தி ரமா அடுக்ககம், 3-வது தளம், 'இ' 2/2ஏ, கிழக்கு லோகமான்ய வீதி,
இரத்தினசபாபதிபுரம், கோவை-641002. பேசி: 94430 - 84642, 94427 01235

மின் அஞ்சல் : adhiyamaanperavai@gmail.com
இணையதளம் : www.aathithamizharperavai.com